செ.வெ. எண்: 38 நாள்: 14.01.2012

## செய்தி வெளியீடு

அரசு நடைமுறைகளில் புதுமையை புகுத்தி, 'அரசை தேடி மக்கள்' என்ற நிலையை மாற்றி 'மக்களை நாடி அரசு'' என்ற நிலையை தகவல் தொழில்நுட்பத்துறை மூலம் ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் மூலம் அரசின் பல்வேறு சேவைகளும் கணினிமயமாக்கப்பட்டு, பொதுமக்கள் அரசு சேவைகளை எளிதில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மின் ஆளுமையினை பயன்படுத்தி, அரசின் சேவைகளை மக்களின் இருப்பிடத்திற்கே கொண்டு செல்லும் அரசுத் துறைகளை ஊக்குவிக்கும் வகையிலும், உரிய அங்கீகாரம் அளிக்கும் வகையிலும், "மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது" (Chief Minister's Award for Excellence in e-Governance for Government Departments) என்ற விருதினை ஆண்டுதோறும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாநிலத்தில் மின் ஆளுமை தொடர்பான சிறந்த செயல்பாடுகளை அங்கீகரித்தல், மின் ஆளுமை குறித்த சிறந்த செயல்முறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல் தொடர்பான அறிவினை பரப்புதல், அரசின் செயல்பாடுகளை மின்ஆளுமை முறைக்கு மாற்றுவதை ஊக்குவித்தல், மின் ஆளுமை முறையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகளை கண்டறிந்து அவற்றினை தீர்த்தல், இடர்பாடுகளை தவிர்த்தல், வெற்றிக்கு வித்திடல் ஆகியவற்றை ஊக்குவித்து, அந்த அனுபவங்களை பகிர்ந்துக் கொள்ளுதல் போன்றவை இந்த விருதின் நோக்கமாகும்.

அரசின் செயல்பாடுகளை பகுப்பாய்வு செய்து, பணிமுறைகளை மறுவடிவமைத்து, செயல்பாடுகளை மேம்படுத்துதலில் சிறந்த செயல்முறை, தரமான சேவை அல்லது இவை அனைத்தையும் உள்ளடக்கிய சிறந்த திட்டங்களை அங்கீகரிக்கும் விதமாக "அரசின் செயல்பாடுகளை மறு வடிவமைத்தலில் சிறந்து விளங்குதல்" (Excellence in Government Process Re-engineering) என்ற பிரிவின் கீழ் ஒரு விருதும், தற்பொழுதுள்ள தகவல் தொலை தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அல்லது புதுமையான முயற்சிகள் மேற்கொண்டு பயனாளிகளுக்கு மேம்படுத்திய சேவைகளை வழங்கும் திட்டங்களை அங்கீகரிக்கும் விதமாக "புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி குடிமக்களை மையமாக கொண்டு வழங்கப்படும் சேவைகளில் சிறந்து விளங்குதல்" (Outstanding Performance in Citizen Centric Service Delivery through Innovative Use of Technology) என்ற பிரிவின் கீழ் ஒரு விருதும், பிற மாவட்டங்களில் பயன்படுத்த தக்கதாக உள்ள மாவட்ட அளவிலான சிறந்த மின்ஆளுமை முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக "மாவட்ட அளவிலான மின்ஆளுமை முயற்சிகள்" (District Level e-Governance Initiative) என்ற பிரிவின் கீழ் ஒரு விருதும், ஆக மூன்று பிரிவுகளின் கீழ் "மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது" (Chief Minister's Award for Excellence in e-Governance for Government Departments) வழங்கப்படும். இந்த விருதின் கீழ் 30,000 ரூபாய் மதிப்புள்ள கோப்பை (Trophy) பரிசாக வழங்கப்படும்.

மின் ஆளுமைக்கான சிறந்த விருதினை பெறும் துறைகளை தேர்வு செய்வதற்காக ஒரு கூர்ந்தாய்வு குழுவும், ஒரு தேர்வுக் குழுவும் அமைக்கப்படும். கூர்ந்தாய்வுக் குழுவின் தலைவராக மின் ஆளுமை முகமையின் தலைமைச் செயல் அலுவலரும் உறுப்பினர்களாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மின் ஆளுமைப் பிரிவு, தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பவியல் துறை, NASSCOM ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களும் செயல்படுவார்கள்.

கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரைகளை மதிப்பீடு செய்து, விருதுகளைப் பெற தகுதியானவர்களை தேர்வு செய்ய தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு தேர்வுக் குழு அமைக்கப்படும். இக் குழுவின் உறுப்பினர்களாக, தகவல் தொழில்நுட்பவியல் துறையின் செயலாளர், தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் தலைமைச் செயல் அலுவலர், தேசிய தகவல் மையத்தின் மாநில தகவல் அலுவலர், சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (Indian Institute of Technology) சார்பாக ஒரு பிரதிநிதி, அண்ணா பல்கலைக்கழகம் சார்பாக ஒரு பிரதிநிதி ஆகியோர் செயல்படுவர்.

துறைகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள், கூர்ந்தாய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு, தகுதியான கருத்துருக்கள் தேர்வுக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். தேர்வுக் குழு, இந்த கருத்துருக்களை ஆய்வு செய்து, ஒவ்வொரு பிரிவிலும் வெற்றியாளர்களை தேர்வு செய்யும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் தமிழ்நாட்டின் அனைத்து துறைகளிலும் மின் ஆளுமை புரட்சி ஏற்பட வழிவகுக்கும். இதன் மூலம் “மக்களை நாடி அரசு” என்ற தமிழக அரசின் நோக்கம் நிறைவேறும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள்: 14.1.2012.